**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை - திருமதி. S. இந்திராகாந்தி, எம்.எல்.,

சார்பு நீதிபதி, நாகப்பட்டினம்.

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனித்திங்கள் 29-ம் நாள்

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் நாள் திங்கட்கிழமை

CNR:NO: TNNG03-000008-2025

**இந்து திருமண அசல் மனு எண்.05/2025**

செல்லம்மாள் ........................மனுதாரர்

..எதிர்..

ஜோதிவேல் ..................எதிர்மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 02.07.2026 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. பால. மதியழகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. பாரி அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்........................

**ஆணையுரை**

I. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.05.2015 தேதியில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, விவாகரத்து பரிகாரம் வழங்க வேண்டுமெனக் கோரியும், மனுவிற்கான செலவுத்தொகையை மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் வழங்க கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் இம்மனு இந்து திருமண சட்டம் பிரிவு 13 (1) (a) - ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.13 16:39:18 +0530

## II. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.05.2015 அன்று இருவீட்டார் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் வேதாரண்யம் தாலுக்கா, தேத்தாகுடி தெற்கு, அருள்மிகு அன்னை ஆதிபராசக்தி திருமணக்கூடத்தில் இந்து சாஸ்திர முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்திற்கு 8 மாதத்திற்கு முன்பே மனுதாரர் வீட்டில் ரூ.1,00,000/- செலவு செய்து திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சி நடத்தப்பட்டு, அப்போது எதிர்மனுதாரர் தரப்பில் 3 பவுன் தங்க செயின் மனுதாரருக்கு அணிவிக்கப்பட்டு, அது தற்போது எதிர்மனுதாரர்வசம் உள்ளது என்றும், திருமணத்திற்கான சீர்வரிசையாக மனுதாரருக்கு 6 1/2 பவுன் நகைகள் அணிவிக்கப்பட்டும், மரகட்டில், மரபீரோ, கிரைண்டர், மிக்சி, பிரிட்ஜ், மெத்தை மற்றும் வீட்டிற்கு தேவையான பித்தளை, எவர்சில்வர் பாத்திரம் ஆகியவைகள் ரூ.2,00,000/- மதிப்பில் வாங்கிக்கொடுத்தும் திருமணம் நடைபெற்றுள்ளது என்றும், மனுதாரருக்கு அணிவிக்கப்பட்ட நகைகள் மட்டும் தற்போது மனுதாரர்வசம் உள்ளது என்றும், திருமணம் முடிந்து மனுதாரரும், எதிர்மனுதாரரும் எதிர்மனுதாரரின் அண்ணன் வீட்டில் கூட்டுக்குடும்பமாக திருமண வாழ்க்கையை தொடங்கினர் என்றும், திருமணத்திற்கு பிறகுதான் எதிர்மனுதாரருக்கு சொந்தவீடு இல்லை என்பதும், எதிர்மனுதாரர் வசித்து வந்த வீடு அவரது அண்ணன் ராதாகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமானது என்பதும், அதில்தான் வாழவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியது தெரியவந்துள்ளது என்றும், திருமணம் ஆன 7 மாதத்திலேயே எதிர்மனுதாரர் மனுதாரரை அவரது அண்ணன் வீட்டில் விட்டுவிட்டு வெளிநாடு சென்று 7 வருடம் கழித்து 2024 ம் ஆண்டு ஜூன் மாதம் ஊருக்கு வந்தார் என்றும், அவ்வாறு வெளிநாடு சென்றபிறகும் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் அன்புடனும்,

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.13 16:39:22 +0530

பாசத்துடனும் நடந்துகொள்ளாமல் மனுதாரரிடம் பேச்சுவார்த்தையை தவிர்த்து வந்துள்ளார் என்றும், வீட்டில் இருந்த நாள் முழுவதும் எதிர்மனுதாரர் கோவிலுக்கு செல்வது, விரதம் இருப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு தாம்பத்திய உறவில் ஈடுபடுவதை தவிர்த்து வந்துள்ளார் என்றும், மனுதாரருக்கு உடல்நல குறைவு ஏற்பட்டால் கூட மருத்துவரிடம் அழைத்து செல்லாமல் எதிர்மனுதாரரும், அவரது அண்ணன் குடும்பத்தினரும் அலட்சியமாக இருந்து வந்துள்ளனர் என்றும், வெளிநாட்டில் இருந்துவந்த எதிர்மனுதாரர் மனுதாரருக்கு யாதொரு தொகையும் அனுப்புவது கிடையாது என்றும், எதிர்மனுதாரரின் அண்ணன் குடும்பத்தினருக்கு பணிவிடைகள் செய்வதுமாக மனுதாரர் இருந்து வந்துள்ளார் என்றும், எதிர்மனுதாரரின் அண்ணன் குடும்பத்தார் பேச்சை கேட்டுக்கொண்டு இந்த மனுதாரருடன் உடல் உறவினை தவிர்த்தும், பேசுவதை தவிர்த்தும் வேண்டாத நபரை போல் பாவித்தும் மனுதாரரை எதிர்மனுதாரர் புறந்தள்ளியுள்ளார் என்றும், 2021ம் ஆண்டு வாக்கில் எதிர்மனுதாரரின் அண்ணன் வீட்டார் கொடுமைகள் தாங்கமுடியாத நிலையில் இந்த மனுதாரர் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்து மருத்துவ சிகிச்சை மூலம் காப்பாற்றப்பட்டு, மீண்டும் எதிர்மனுதாரரின் அண்ணன் வீட்டிற்கு சென்றபோது இங்கு வரக்கூடாது, எங்கள் குடும்ப கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறி எதிர்மனுதாரர் இந்த மனுதாரரை வெளியேற்றிவிட்டார்கள் என்றும், அது முதல் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோற்றுவிட்டன என்றும், மனுதாரரை எதிர்மனுதாரர் வாழ வைப்பார் என்ற நம்பிக்கை அற்றுபோய்விட்ட காரணத்தினால் மனுதாரருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்தும், திருமண சீர்வரிசை பொருட்கள் அனைத்தையும் திரும்ப பெற்று தரவேண்டி வேதாரண்யம் அனைத்து மகளிர் காவல்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.13 16:39:27 +0530

நிலையத்தில் கடந்த 04.11.2024 அன்று புகார் கொடுத்து, 05.11.2024 மனு ஏற்பு ரசீது வழங்கியுள்ளனர் என்றும், இனியும் சேர்ந்து வாழ முடியாது என முடிவெடுத்து எதிர்மனுதாரரிடமிருந்து திருமண முறிவு பெறுவது தவிர வேறு வழியில்லை என்றும், எனவே, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.05.2015 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்க வேண்டுமென்று கோரி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## III. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த விவாகரத்து மனு சட்டப்படியும், சங்கதிகளின் படியும் அறவே நிலைநிற்கக்கூடியதல்ல என்றும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.05.2015 அன்று நடைபெற்றது உண்மை என்றும், மனுதாரர் பொய்யான காரணங்களை கூறி மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரருடன் இந்த எதிர்மனுதாரர் அன்போடும், பாசத்துடன் பேசி பழகி வந்துள்ளார் என்றும், மனுதாரர் தன் விருப்பப்படி வாழ்வதற்காக தனது பெற்றோர் வீட்டிற்கு சென்று இருந்து வருகிறார் என்றும், இந்த எதிர்மனுதாரரும், அவர் அண்ணன் குடும்பத்தினரும் பலமுறை நேரடியாகவும், மத்தியஸ்தர்கள் மூலமாகவும் வாழ அழைத்தும் வாழ வராமல் தன்னிச்சையாக மனுதாரர் பிரிந்து இருந்து வருகிறார் என்றும், மனுதாரர் தரப்பில் சீர்வரிசை பொருட்களை திரும்ப பெறவேண்டி வேதாரண்யம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், மனு ரசீது வழங்கியிருப்பதாகவும் கூறுவது மனுவிற்காக பெறப்பட்ட ஆவணம் என்றும், இந்த எதிர்மனுதாரர் தொழில் நிமித்தமாக வெளிநாடு சென்று சம்பாதித்து வந்தார் என்றும், எதிர்மனுதாரர் அடிக்கடி வெளிநாட்டிலிருந்து இந்தியா வந்து செல்ல முடியாது என்பதால்

நீண்டகாலமாக வேலையில் இருந்து வந்ததன் காரணமாக மனுதாரர் இந்த எதிர்மனுதாரருடன் கோபித்துக்கொண்டு பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளார் என்றும், இந்த எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழவே எப்போதும் தயாராக உள்ளார் என்றும், எதிர்மனுதாரர் சம்பாதிக்கும் பணத்தை மனுதாரர் செலவுகளுக்காக அனுப்பியும் வைத்துள்ளார் என்றும், மனுதாரருக்கு எதிர்மனுதாரரின் திருமணத்தின் மூலமாக குழந்தை இல்லை என்பதால் மனுதாரருடன் தாம்பத்திய உறவு வைத்துக்கொள்ளவில்லை என்று பொய்யாக கூறியுள்ளார் என்றும், மனுதாரருக்கு குழந்தை பெறுவதில் உள்ள குறைபாடுகளை சரிசெய்து சிகிச்சைகள் அளிக்கவும் மனுதாரர் முன்வரவில்லை என்றும், எதிர்மனுதாரர் மனுதாரருடன் நல்லுறவிலும், பாசத்துடனும்தான் இருந்து வந்துள்ளார் என்றும், மனுதாரருக்கு இந்த எதிர்மனுதாரரால் எவ்வித கொடுமையும், மனஉளைச்சலும் ஏற்படுத்தப்படவில்லை என்றும், மனுதாரர் இந்த எதிர்மனுதாரரின் அண்ணன் வீட்டில் சேர்ந்து வாழ முடியாது என்று கூறிக்கொண்டு அடிக்கடி அண்ணன் குடும்பத்துடன் தகராறு செய்து தற்கொலை செய்து கொள்வேன் என மிரட்டி வந்துள்ளார் என்றும், இந்த எதிர்மனுதாரர் தனிக்குடித்தனம் வேரவேண்டும் என மனுதாரர் கோரிக்கை விடுத்து வந்துள்ளார் என்றும், அதனால் எதிர்மனுதாரர் மனுதாரரை தனியாக அழைத்து சென்று குடும்பம் நடத்த தயாராக உள்ளார் என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்திட வேண்டும் என்றும் குறிப்பிட்டு எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## IV. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

1. மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.13 16:39:41 +0530

இல்லையா? என்பதேயாகும்.

2. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் மசா.ஆ..4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

## V. <u>பிரச்சனைக்கான தீர்வு</u>

1) மனுதாரரும், எதிர்மனுதாரரும் கடந்த 22.05.2015 அன்று இருவீட்டார் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் வேதாரண்யம் தாலுக்கா, தேத்தாகுடி தெற்கு அருள்மிகு அன்னை ஆதிபராசக்தி திருமணக்கூடத்தில் இந்து சாஸ்திர முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றும், திருமணம் முடிந்து மனுதாரரும், எதிர்மனுதாரரும் எதிர்மனுதாரரின் அண்ணன் வீட்டில் கூட்டுக்குடும்பமாக திருமண வாழ்க்கையை தொடங்கினர் என்றும், எதிர்மனுதாரருக்கு சொந்தவீடு இல்லை என்பதும், எதிர்மனுதாரர் வசித்து வந்த வீடு அவரது அண்ணன் ராதாகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமானது என்பதும், அதில்தான் வாழவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியதும் திருமணத்திற்கு பிறகு மனுதாரருக்கு தெரியவந்துள்ளது என்றும், திருமணம் ஆன 7 மாதத்திலேயே எதிர்மனுதாரர் மனுதாரரை அவரது அண்ணன் வீட்டில் விட்டுவிட்டு வெளிநாடு சென்று 7 வருடம் கழித்து 2024 ம் ஆண்டு ஜூன் மாதம் ஊருக்கு வந்தார் என்றும், அவ்வாறு வெளிநாடு சென்றபிறகும் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் அன்புடனும், பாசத்துடனும் நடந்துகொள்ளாமல் மனுதாரரிடம் பேச்சுவார்த்தையை தவிர்த்து வந்துள்ளார் என்றும், வீட்டில் இருந்த நாள் முழுவதும் எதிர்மனுதாரர் கோவிலுக்கு செல்வது, விரதம் இருப்பது போன்ற

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.13 16:39:46 +0530

நடவடிக்கைகளில் ஈடுபட்டு தாம்பத்திய உறவில் ஈடுபடுவதை தவிர்த்து வந்துள்ளார் என்றும், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு யாதொரு தொகையும் அனுப்புவது கிடையாது என்றும், எதிர்மனுதாரரின் அண்ணன் குடும்பத்தார் பேச்சை கேட்டுக்கொண்டு இந்த மனுதாரருடன் உடல் உறவினை தவிர்த்தும், பேசுவதை தவிர்த்தும் வேண்டாத நபரை போல் பாவித்து மனுதாரரை எதிர்மனுதாரர் புறந்தள்ளியுள்ளார் என்றும், 2021ம் ஆண்டு வாக்கில் எதிர்மனுதாரரின் அண்ணன் வீட்டார் கொடுமைகள் தாங்கமுடியாத நிலையில் இந்த மனுதாரர் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்து மருத்துவ சிகிச்சை மூலம் காப்பாற்றப்பட்டு மீண்டும் எதிர்மனுதாரரின் அண்ணன் வீட்டிற்கு சென்றபோது இங்கு வரக்கூடாது, எங்கள் குடும்ப கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறி எதிர்மனுதாரர் இந்த மனுதாரரை வெளியேற்றிவிட்டார் என்றும், மனுதாரருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்தும், திருமண சீர்வரிசை பொருட்கள் அனைத்தையும் திரும்ப பெற்று தரவேண்டி வேதாரண்யம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 04.11.2024 அன்று புகார் கொடுத்து, 05.11.2024 மனு ஏற்பு ரசீது வழங்கியுள்ளனர் என்றும், இனியும் சேர்ந்து வாழ முடியாது என முடிவெடுத்து, கடந்த 22.05.2015 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்க வேண்டுமென்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை எதிர்மனுதாரர் தனது எதிருரை மூலம் கடுமையாக மறுத்துள்ளார்.

2) மனுதாரர் தனது மனுவில் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அதற்கு ஆதரவாக 22.05.2015 தேதியிட்ட திருமண அழைப்பிதழ் அசல் ம.சா.ஆ.1 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டை நகல்

S INDRA GANDHI
Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.13 16:39:50 +0530

ம.சா.ஆ.2 ஆகவும், 4.11.2024 தேதியிட்ட மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக வேதாரண்யம்அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 05.11.2024 தேதியிட்ட மேற்படி புகார்மனுவிற்கு வேதாரண்யம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்து மனு ஏற்பு ரசீது ம.சா.ஆ.4 ஆகவும் மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3) ம.சா.1 தனது சாட்சியத்தில் மனுவில் கண்ட சங்கதிகளை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார். ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "தனது திருமண தேதி 22.05.2015 என்றும், திருமணத்தின் பயனாக தங்களுக்கு குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை என்றும், தானும், எதிர்மனுதாரரும் பிரிந்து விடுவதாக ஒருமனதாக முடிவு செய்துவிட்டோம் என்றால் சரிதான்" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4) மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.05.2015 தேதியில் திருமணம் நடைபெற்றுள்ளது. திருமணத்தின் வாயிலாக மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் குழந்தைகள் இல்லை என்பதும், 2021ம் ஆண்டிலிருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் தெரியவருகிறது. மேலும் மனுதாரருக்கு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்பதும் ம.சா.1 சாட்சியத்தின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

5) மேற்படி மனுவில் எதிர்மனுதாரர் எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எ.சா.1 தனது எதிருரையில் கண்ட சங்கதிகளை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார். எ..சா.1 தனது குறுக்கு விசாரணையில்,

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.13 16:39:56 +0530

"தான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் அன்னியில் மனுதாரருக்கு விவாகரத்து கொடுப்பதற்கு தனக்கு ஆட்சேபணையில்லை என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிப்பதில் தனக்கு எந்த ஆட்சேபணையுமில்லை என்றால் சரிதான் என்றும், மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரிதான்" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6) மேற்படி வழக்கில் விசாரிக்கப்பட்ட வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலனை செய்யும்போது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.05.2015 தேதியன்று இந்து சாஸ்திர முறைப்படி திருமணம் நடைபெற்றது என்பதும் திருமணத்தின் பலனாக குழந்தைகள் இல்லை என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரருக்கு எதிர்மனுதாரர் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் கொடுமைகள் செய்துள்ளார் என்பது சாட்சியங்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழாமலும், எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்புவதாக எதிருரையில் குறிப்பிட்டிருந்தாலும், நீதிமன்றத்தில் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையில் மனுதாரர் கோரிய விவாகரத்து பரிகாரத்தை கொடுப்பதற்கு எதிர்மனுதாரருக்கு ஆட்சேபணையில்லை என்று சாட்சியமளித்துள்ளார்.

7) எனவே, மனுதாரர் தனது மனுவை உரிய வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவண சாட்சியங்கள் வாயிலாக தெளிவாக நிரூபித்துள்ள நிலையில், மனுதாரரும், எதிர்மனுதாரரும் 2021ம் ஆண்டிலிருந்து பிரிந்து வாழ்ந்து வரும் நிலையிலும், திருமணத்தின் பலனாக மனுதாரருக்கும்,

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.13 16:40:01 +0530

எதிர்மனுதாரருக்கும் குழந்தை இல்லாத நிலையிலும் எதிர்மனுதாரரை மனுதாரருடன் சேர்ந்து வாழ உத்தரவிடுவது இருவரின் வாழ்க்கையிலும் அது நிம்மதியை ஏற்படுத்தாது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதித்து, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.05.2015 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து உத்தரவிடுகிறது.

**முடிவில்,**

1. **மனுதாரர் தாக்கல் செய்த மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**
2. **மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 22.05.2015 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, பிழைநீக்கம் செய்து இன்று 13.07.2026 அவையறிய பகரப்பட்டது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.07.13 16:40:18 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :

ம.சா.1 திருமதி. செல்லம்மாள் ( மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 22.05.2015 | திருமண அழைப்பிதழ் | (அசல்) |
| ம.சா.ஆ.2 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை | (நகல்) |
| ம.சா.ஆ.3 | 04.11.2024 | மனுதாரர் வேதாரண்யம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர்மீது கொடுக்கப்பட்ட புகார் மனு | (நகல்) |
| ம.சா.ஆ.4 | 05.11.2024 | மேற்படி புகாருக்காக வேதாரண்யம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார்மனு ஏற்பு ரசீது | (நகல்) |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

எ.சா.1 திரு. ஜோதிவேல் (எதிர்மனுதாரர்)

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u>** : இல்லை

S INDRA GANDHI
Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.13 16:40:23 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

Draft / Fair உத்தரவு

சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**H.M.O.P.No.05/2025**

நாள் : 13.07.2026